# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 04 வியாழக்கிழமை 20.07.2023 கதிர் 251


### 13றுடன் சமஷ்டியும் என்பதே எமது கோரிக்கையும்

# ஜனாதிபதியுடனான பேச்சு வெறும் ஏமாற்று நாடகம்

### ஜனநாயகக் கூட்டணி பேச்சாளர் சுரேஸ் காட்டம்

(-எஸ்.நிதர்ஷன்)

இந்தியா செல்வதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளுடன் நடத்திய பேச்சு வெறும் ஏமாற்று நாடகம் என்று கடும் காட்டமாக விமர்சித்துள்ளார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவரும் பேச்சாளருமான ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

யாழ்மாவட்டம், கட்டப்பிராயிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்றே இந்திய இலங்கை அரசுகளிடம் நாம் கேட்டுள்ளோம். இந்த 13ஐ அமுல்படுத்திக் கொண்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்க வேண்டுமென்பதே எங்களது கோரிக்கையாகவும் உள்ளது. ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழ்க்கட்சிகளின்பிரதிநிதிகளைச்சந்தித்தார். இதற்கான அழைப்பு ஜனாதிபதியின் வடக்கு மாகாண இணைப்புச் செயலாளர் இளங்கோவன் ஊடாக விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் 15 விடயங்கள் பேசப்படுவதாக நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருந்தது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஊழல் ஒழிப்புச்சட்டமூலம், உண்மையைக் கண்டறியும் பொறிமுறை மற்றும் அதுகுறித்த சட்டமூலம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகச்சட்டம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கல், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், தேசியகாணிஆணைக் குழுவை ஸ்தாபித்தல், நிலைபேறான வனமுகாமைத்துவ செயற்திட்டத்தின் ஊடாகக் காணி விவகாரங்களில் ☞2

## சஜித்தோடு வைத்துள்ள கூட்டு மனோ சொல்லும்; விளக்கம்

தமிழ் முற்போக்குக் கூட்டணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் கரங்கோர்த்து இருப்பதற்கான காரணங்களைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார் அக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உரை தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளைவரை நாடெங்கும் பரந்து வாழும் பெருந்தோட்ட மக்களுக்கு வீடு கட்டி வாழவும், பயிர்ச் செய்கை வாழ்வாதாரத்துக்கும் காணி வழங்கி, அவர்களைச் சிறுதோட்ட உரிமையாளராக்கும் எமது கொள்கையைச் சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டுள்ளார். அதேபோல், கொழும்பு மாநகரில் ☞2

## பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு எதிராக முன்னணி முறைப்பாடு



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னனி மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு கிளிநொசி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸாருக்கு எதிராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

கட்சியின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன் ஆகியோர் இந்த முறைப்பாட்டினை நேற்றுப் பதிவு செய்தனர்.

ஜூலை 14 நீதிமன்ற கட்டளைக்கு உட்பட்டு முல்லைத்தீவு, ☞2

## வேற்றுக்கிரகவாசிகளிடமும்கூட தமிழ் தலைவர்கள் முறையிடுவர்

### எள்ளி நகையாடுகிறார் டக்ளஸ்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தமிழ் அரசியல் தரப்பினருக்கு நல்லதொரு பதிலை வழங்கியிருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் வேற்றுக் கிரகவாசிகள் தலையிட வேண்டும் என்று சக தமிழ் தலைமைகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பலஸ்தீன விவகாரம் தொடர்பான விவாதம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கின்ற சர்வதேச ரீதியான அமைப்புக்கள் எவையும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு எதிராக எந்த விதமான கருத்துக்களும் தெரிவிக்காமல் இருந்து வருவதாகக் விமர்சனங்கள் எழுந்து வருகின்ற நிலையில், எமது தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் முறைப்பாடுகளை முன்வதைதுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கையில் மழை பெய்தாலும் சர்வதேசம் குடைபிடிக்க வேண்டும் எனக் கூக்குரலிடுகின்ற இந்தத் தமிழ் அரசியல் தரப்பினருக்கு, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நல்லதொரு பதிலை வழங்கியதாகவும் - அதாவது 'அனைத்துக்கும் சர்வதேசம், சர்வதேசம் எனக் கூறிக் கொண்டு எதிர்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். சர்வதேசத்திற்கும் சில வரையறைகள் உள்ளன' எனக் கூறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தமிழ் ☞2

### 193 திருத்தங்களுடன்

## ஊழல் எதிர்ப்புச் சட்டம் நேற்று நிறைவேற்றம்

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பு இல்லாமல் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது

குறித்த சட்டமூலம் 193 திருத்தங்களுடன் சபையில் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைய கடந்த 6 ஆம் திகதி குறித்த சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது

இந்த ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தெற்காசியாவிலேயே சிறந்த ☞2

## ரூ. 11 மில்லியன் பெறுமதியான மாமுனையில் கஞ்சா சிக்கியது

யாழ். மாவட்டம்,, வடமராட்சிகிழக்கு, மாமுனையில், சுமார் 11 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாவை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது மாமுனைப் பகுதியில் ☞2

## புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்க செயற்குழு நியமிப்பு

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் வேலையிழந்தவர்களுக்கு மீண்டும் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்காகச் செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற லந்துரையாடலின்போது இது தொடர்பான குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு, நிதி அமைச்சு, பொருளாதார உறுதிப்பாடற்ற தன்மை மற்றும் கொள்கை அமைச்சு, சுற்றுலா அமைச்சு, மீன்பிடி அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்கள் இச்செயற்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தபோது பொருளாதார நெருக்கடியால் வேலையிழந்தவர்களுக்குத் தீர்வு காண்பதற்காக முத்தரப்பு குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு வேலை இழந்தவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதற்கான ஒரு மூலோபாய திட்டத்தை தயாரித்தது மற்றும் அதை செயல்படுத்தும் பொறுப்பு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குமாறு ☞2

## கடலுக்கு செல்ல வேண்டாம் மீனவர்களுக்கு அறிவுறுத்து

தென்மேற்கு பருவமழையால் கடும் காற்று மற்றும் கடல் சீற்றம் காணப்படுவதால் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை, மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடற்தொழில் மற்றும் கடற்நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று கடற்படை மற்றும் மீனவ சமூகத்தினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ☞2

## காலியில் இளைஞர் சுட்டுப் படுகொலை

### இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலி - இக்கடுவை பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அப்பிரதேசத்தைச்சேர்ந்த 28 வயதுடைய ஆர்.பிரசன்ன என்ற நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றும் குறித்த இளைஞர், மதிய உணவுக்காக மோட்டார் சைக்கிளில் வீடு சென்று திரும்பும்போது வீதியில் வைத்து சுட்டுப் பட ☞2

## நயினாமடு சீனித் தொழிற்சாலைக்கான 500 ஏக்கர் காடழிப்பால் யானை - மனித மோதல் தீவிரப்படும்

### வனவள மற்றும் வன உயிரிகள் திணைக்களம் அறிக்கை

ந.லோகதயாளன்.

வவுனியா மாவட்டம், நயினாமடுவில் சீனித் தொழிற்சாலைக்கு வழங்க பரிந்துரைக்கும் 200 ஹெக்டேயர் (494 ஏக்கர்) காட்டினையும் அழித்தால் அதனை அண்மித்த பகுதி மனிதர்களிற்கும் யானைகளிற்கும் மோதல் தீவிரப்படும் களமாக மாறும் என வனவளம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அறிக்கை வழங்கியுள்ளது.

ஜூன் 26 திகதியிட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் திணைக்களம் இந்த விவரத்தைத் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் சீனித் தொழிற்சாலைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட 200 ஹெக்டேயர் அல்லது 500 ஏக்கர நிலத்தை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்ததில் அந்த இடம் காடு சார்ந்த வனப்பகுதி எனபதோடு ஏற்கனவே மத்தியதர வகுப்பினருக்கு வழங்குவதற்காக விடுவிக்கப்பட்ட காணிகளாகும். மனிதப் பாவணை மாறாக்காடாகும். அதனூடாக காடுகள் அழிப்பு என்பது மனிதர்கள் யானைகளுடனான மோதல்கள் தீவிரமடையும் எனக்கண்டறியப்பட்டுள்ளது. எனவே காடுகள் அல்லாத காணிகளை இதற்குத் தெரிவு செய்வதே சிறந்தது என அவதானிக்கப்படுகின்றது என்றும் அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

இருப்பினும் கடிதத்தின் இறுதியில் வேறு காணிகள் தேடமுடியாவிட்டால் இதனை முன்மொழிய 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு அமைய சுற்றாடல் விதிமுறைக்கேற்ப பரிந்துரைக்கின்றேன் என வனவள மற்றும் வன உயிரிகள் துறை அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி ஜனாதிபதி செயலகத்திற்கு வழங்கிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அந்தக்கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி ஆகியோரின் முன்மொழிவுடன் ஜனாதிபதி ரணிலால் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்ட நயினாமடு சீனித் தொழிற்சாலைக்கு மட்டும் நயினாமடுவில் 299 ஹெக்டேயர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தக் காணி குறித்தே வனவள மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தச் சீனித் தொழிற்சாலைத் திட்டத்திற்காக மேலும் 7 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை வவுனியா வடக்கில் விடுவிக்குமாறும் ஜனாதிபதியால் முன்வைக் கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பகுதியில் அவ்வளவு காணிகள் இல்லாத காரணத்தால் பெருளமவு காடுகளை அழித்தே அந்த விவசாய நிலத்தையும் பெறவேண்டி இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்த நிலம் குறித்து வனவள மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் இதுவரை ஜனாதிபதி செயலகத்திற்குப் பரிந்துரை எதனையும் வழங்கவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தீர்மானம் மேற்கொள்ளல், தொல்பொருட்கள்தொடர்பான தேசிய வேலைத்திட்டம், தென்னிந்தியாவின் புனர்வாழ்வுமுகாம்களில்வாழும் இலங்கையர்களுக்குப் பன்னாட்டுக் கடவுச்சீட்டு வழங்குவதற்கானவேலைத்திட்டம், வட-கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்தவர்களுக்கான மீள்குடியேற்றம், வடமாகாணத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், அதிகாரப்பகிர்வு மற்றும் வடமாகாணத்துக்கான அபிவிருத்திவேலைத்திட்டம் ஆகிய 15 விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. கடைசியாகத்தான் அதிகாரப் பகிர்வு என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அது ஒரு உத்தி, ஏனைய விடயங்கள் குறித்து நீண்ட நேரத்தைச் செலவிட்டு கலந்துரையாடல்நடத்தினால், கடைசியில் எல்லோரும் களைத்துவிடுவார்கள். அந்த நேரத்தில் அதிகாரப் பகிர்வுதொடர்பில்பேசினால், களைப்பில் கிரகிக்கும் ஆற்றலை இழந்திருக்கக்கூடிய தலைவர்களிடம் இருந்து அதிகளவில் எதிர்ப்புக் கிளம்பாது, முடிந்தளவுக்கு அவசரமாகஎல்லாவற்றுக்கும்தலையாட்டக்கூடிய சூழல் அல்லது அவற்றைப் பிறிதொரு தினத்தில் பார்க்கலாம் என்று ஒத்திவைப்பதற்கான சூழல் ஏற்படும் வாய்ப்புக்களை இந்த உத்தி அதிகரிக்கும்.

கூட்டம் தொடங்கியதும் நிகழ்ச்சிநிரலின்படிஒவ்வொன்றாகஎடுத்துப்பேசத்தொடங்கினார்ஜனாதிபதி. தமிழ்அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் தலையைக் குனிந்துகண்களைமூடியபடி அவரது கருத்துக்களைக் கிரகித்துக்கொண்டிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாள்ஸ் நிர்மலநாதன், அமைச்சர் டக்ளஸ் போன்றவர்கள் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அவரால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள்குறித்துத்தமது கருத்துக்களை முன்வைத்து அந்தக் கலந்துரையாடலை நகர்த்திச் சென்றனர்.

ஒரு கட்டத்தில் தனது குரலைஉயர்த்தியசம்பந்தர், இதெல்லாம் இருக்கட்டும், நாங்கள் இங்கே இப்போது கூடியிருப்பதுஇந்தவிடயங்கள் தொடர்பில் பேசுவதற்கல்ல. அது கீழே இருக்கின்றது. அதிகாரப் பகிர்வு. அது பற்றித்தான் நாங்கள் இங்கே பேசவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் வந்திருக்கின்றோம். முதலில் அதைப் பற்றிப் பேசலாம். அதில் ஒரு தீர்வைக் கண்டுவிட்டால் மற்றப் பிரச்சினைகள் எல்லாம்தானாவே ஒருதீர்வுக்கு வந்துவிடும். அதனால் முதலில் அதை (அதிகாரப் பகிர்வு)எடுங்கள். பேசுவோம். என்றார் உரத்த குரலில்.

முன்னால்அமர்ந்திருப்பவர் நாட்டின்ஜனாதிபதி. அவருக்கு முன்பாகக் குரலை உயர்த்துவது பண்பானது அல்ல, நாட்டின் அதிகாரம்மிக்க தலைவருக்கான அதியுச்ச மரியாதையை வழங்க வேண்டும் என்கிற மட்டுமரியாதைகளை அந்த இடத்தில் வழங்குவதற்கு சம்பந்தர் தயாராக இருக்கவில்லை என்பது அவரது உணர்ச்சி மிகுந்த கனதியான குரலில் எதிரொலித்தது. அதிகாரப் பகிர்வு தவிர மற்ற விடயங்களைப் பேசுவதில்லை என்பதில் அவர் திடமாக இருந்தார். அந்த உறுதி அவரது குரலில் கணீரென எதிரொலித்தது.

அவரதுஅந்தப்பிடிவாதமான நிலைப்பாட்டுக்கு முன்னாள் ரணிலால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நிகழ்ச்சி நிரலின்படி பேசி அதிகாரப் பகிர்வுக்குச் செல்லலாம் என்றார்ரணில். அதில் பயன் இல்லை என்று முகத்திலடித்தது போன்று சொல்லிவிட்டார். பிடிவாதமாக நின்றுகொண்டார். முதலில் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசலாம். அதற்காகத்தான் வந்திருக்கின்றோம் என்றார்.

அவரது அழுங்குப் பிடியிலிருந்து நழுவ மற்றைய தலைவர்களை துணைக்கு அழைக்கப்பார்த்தார்ரணில். என்ன செய்யலாம், மற்ற விடயங்களைப் பேசிவிட்டு அதிகாரப்பகிர்வுக்குச்செல்லலாமா அல்லது அதிகாரப் பகிர்வு விடயத்தை உடனே எடுக்கலாமா என்று அவர்களைப் பார்த்துக் கேட்டார். பெரியளவில்யாரிடமிருந்தும் எந்தச் சலனமும் இல்லாத காரணத்தால், சம்பந்தரின் பிடிவாதத்தைப் பார்த்து எல்லோரும் வாயடைத்துப் போயிருந்த காரணத்தால் கடைசியில் அதிகாரப் பகிர்வு விடயத்தைக் கையிலெடுக்க வேண்டியவரானார் ரணில்.

உடனேயே நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்த அரசமைப்பின் 13ஆவது திருத்தம்தொடர்பானவிடயத்தை முற்படுத்திக் கருத்துக் கூற முற்பட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். அவரை இடைமறித்த ரணில், அந்த விடயங்களை நான் வாசிக்கிறேனே என்று கேட்டுவிட்டு, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஆளும் தரப்புஎன்னசெய்யப்போகின்றது என்பதை விளக்கினார். முதலில் நாடாளுமன்றத்தில் பிரேரணைகள்முன்வைக்கப்படும், அவை நாடாளுமன்றத்தில் ஏற்கப்பட்டு சட்டமாக்கப்படும், பின்னர் அரசமைப்புத் திருத்தம் செய்யப்படும் என்றார்.

அவர் தனது உரையை முடித்ததும்அவற்றைநிராகரிக்கின்றோம் என்பதுதான் தமது நிலைப்பாடு என்று சுமந்திரன் தெரிவித்தார். பழையவாக்குறுதிகள்எல்லாவற்றையும் எடுத்து வைத்து அவர் அந்த விளக்கத்தை வழங்கினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சம்பந்தர் உரத்த குரலில் ஒரு பிடி பிடித்தார். ரணிலைஒருஏமாற்றுக்காரர் என்றுமட்டும்நேரில்சொல்லவில்லை அவர், ஆனால் அந்த அர்த்தப்பட மீதி என்னவெல்லாம்சொல்லமுடியுமோ அவை எல்லாவற்றையும் போட்டுவிளாசினார். நானும் பலஜனாதிபதிகளைப்பார்த்திருக்கின்றேன். ஆனால் உங்களைப் போல சுத்துமாத்து விடும் ஜனாதிபதியை பார்க்கவில்லை என்பதாக இருந்தது அவரது கருத்துக்களின் சாராம்சம். ஒற்றையாட்சிக்குக்கீழ்ஒருதீர்வைப் பெறவே முடியாது, அதற்கு இடமில்லை என்றார். வடக்கு கிழக்கு இணைந்த தீர்வைத்தான் ஏற்போம் என்றார்.

நீங்கள் இப்போது இந்தியாவுக்குச்செல்வதற்காகத்தான் இந்த அவசரக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறீர்கள். இதில் ஒன்றும் இல்லை. வெறும் ஏமாற்று வேலை. நாங்கள் இதையெல்லாம்நிராகரிக்கின்றோம். நீங்கள் போகப்போற இடத்திற்கு நீங்கள் சென்று சேர்வதற்கு முன்னதாக, எங்களுடைய முடிவு அங்கு போய்ச் சேரும் என்றார்.

பேசுகிறோம் பேசுகிறோம் என்று இழுத்தடித்துக் கொண்டே போகிறீர்கள். காலத்தை இழுத்தடிப்பதைத் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. எங்களைப் பேய்க்காட்டுகின்றீர்கள்என்று கடும் பிடி பிடித்தார். 13ஐ நடைமுறைப்படுத்துவதை நாங்கள் எதிர்க்க மாட்டோம். ஆனால், அதை ஒரு தீர்வாக முன்வைப்பதை ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்றார் திட்டவட்டமாக.

அதற்கு ஒரு கட்டத்தில் பதிலளித்த ரணில், நீங்கள் ஏற்கவில்லை என்றால் அதனை ஏற்பவர்களை வைத்துக்கொண்டுஅவற்றை நான் செய்வேன். அதில் நான் அர்ப்பணிப்போடு இருக்கின்றேன் என்றார். அப்படியென்றால் அதைச் செய்யவேண்டியதுதானே, பிறகென்னத்திற்குஎங்களைக் கூப்பிட்டனீர்கள், உங்களை ஆதரிப்பவர்களுடனேயே செய்யவேண்டியதைச்செய்ய வேண்டியதுதானே என்று ஒரே போடாகப் போட்டார் சம்பந்தர்.

இன்றைய பேச்சையும் உங்களுடைய கூற்றையும் பயனற்ற ஒன்றாகவே கருதுகின்றேன். உங்களுடைய இந்தக் கருத்துக்களில்எதற்கும்எங்களுடைய உடன்பாடு கிடையாது. இது நீங்கள் போக இருக்கும் இடத்துக்கு நீங்கள் போக முதல் போகும் - என்றார்.

சம்பந்தருடைய ஆவேசத்தை அடுத்து கூட்டம் அரைகுறையில் முடிந்தது. அதன் பின்னர் மற்றைய விடயங்களைப் பற்றிப் பேசும் நிலையில் ரணில் இல்லாததால் கூட்டத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் இந்தியா செல்வதற்கு முன்னதாக அவசர அவசரமாக தமிழ்த் தரப்பினரை அழைத்து ஜனாதிபதி பேச்சு நடத்தியிருக்கின்றார். அந்தப் பேச்சு என்பது வெறும் ஏமாற்று நாடகம் என்பதை அனைவரும் சரிவரப் புரிந்து கொள்ளவேண்டும்.

அரசமைப்பின் 13 பிளஸ் என்று சொல்லிவிட்டு இப்போது அந்த 13இல் இருக்கிறசிலதையும்நீக்குவது அல்லது வழங்க முடியாது என்று கூறுவது 13 மைனஸ் என்பதாகவே அமையும். அதிலும் பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது எனக் கூறுவது ஏற்புடையதல்ல. அது ஏமாற்றுகின்ற செயல். பொலிஸ் அதிகாரமில்லாத மாகாணசபை என்பது கையில்லாத முடம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்ப்படுத்தாமல் அதாவது அதில் இருப்பவற்றை வெட்டி தூக்கிவிட்டு தாம் நினைப்பதை அல்லது விரும்பியதைவழங்குவதாக ஆளும் தரப்புக் கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாது.

அரசமைப்பில் உள்ளதை உள்ளபடியேதான் கேட்கிறோம். அதனைத் தருவதற்கு மறுத்துவிட்டு இந்தியாவிற்குச் சென்று 13ஐ நடைமுறைப்படுத்த தமிழ் தரப்புடன் பேசியுள்ளதாக கூறுவது தவறானது. உண்மை என்ன என்பதை இந்தியாவிற்கு நாம் தெரியப்படுத்தியுள்ளோம்.

ஆகையினால் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் ஏமாற்றுவித்தையைஇந்தியா புரிந்துகொள்ளவேண்டும் என்பதுடன் 13 ஆவதை முழுமையாகஅமுல்ப்படுத்த வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கவேண்டும்எனவும்கேட்டுக் கொள்கிறோம்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதிமகிந்தராஜபக்ஷ13 பிளஸ் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்கூறியிருக்கிற நிலைமையில்இப்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க 13 மைனஸ் என்பதுபோலகூறுவதுஅவரது இயலாத்தன்மையைக் காட்டுகிறது. அதுமட்டுமல்லாமல் சிங்கள பௌத்த இனவாதத்திற்கு ரணில் விக்கிரமசிங்க அச்சப்படுகின்றாள்என்பதும்தெரிகிறது.

அவர் ரணில் ராஜபக்ச அல்லஎன்பதும்அவர்ரணில் விக்கிரமசிங்கதான்என்பதும் எங்களுக்கும் தெரியும்.

ஆகவே எல்லோரும் ஒப்புதல் கொடுத்துள்ளதை நிறைவேற்ற அச்சப்பட தேவையில்லை. இங்கு உள்ளதை உள்ளபடியே நிறைவேற்றவேண்டும். இதனை இந்தியாவும்புரிந்து கொண்டுளமக்குஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.

## சஜித்தோடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்த வீடு இல்லாமல் வாடகை வீடுகளில் வாழும் மக்களுக்குத் தொடர்மனைகளைக் கட்டி சொந்த வீடுகள் வழங்கவும் சஜித்பிரேமதாஸ எம்முடன் ஒரு கட்சியாக, தேசியக்கூட்டணியாகஉடன்பாடு கண்டுள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, சஜித் பிரேமதாஸ தலைமையில்ஐக்கியமக்கள் கூட்டணியில், பங்காளிக் கட்சியாக அங்கம் வகிக்கப் பிரதான காரணங்களில் இது ஒன்றாகும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இவை தொடர்பில் எமக்கு எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் உறுதிகள் அளித்துள்ளார். பகிரங்கமாக மேடைகளில் கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் அதை இன்று மீண்டும் கூறி உறுதி செய்தார்.

மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென், வயம்ப ஆகிய 6 மாகாணங்களின், பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை,இரத்தினபுரி,கேகாலை, கொழும்பு (அவிசாவளை), களுத்துறை, குருநாகலை, காலி, மாத்தறை ஆகிய 12 மாவட்டங்களில் அமைந்துள்ள 102 பிரதேச செயலக பிரிவுகளில் பெருந்தோட்டத்துறை அமைந்துள்ளது. எங்கெல்லாம் எம்மவர் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் காணி உரிமையும், வீட்டு உரிமையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல், தொழில், பொருளாதாரம்,வாழ்வாதாரம் ஆகிய காரணங்களை தேடி பெருந்தொகையான நமது மக்கள் மலைநாட்டு பிரதேசங்களில் இருந்தும், வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இருந்தும் தேசிய தலைநகரம் கொழும்பு மாநகரில் வந்தும் குடியேறுகின்றார்கள். இங்கேயே பிறந்து வளர்ந்து வாழும் மக்களும் இருக்கின்றார்கள். அனைவருக்கும் கல்வி, வீடு, வாழ்வாதார உரிமைகளை உறுதி செய்து, பாதுகாப்பு அளிக்க நான் இங்கே இருக்கின்றேன்.

ரணிலும், சஜித்தும் இணைந்தால் நல்லது என மக்கள் விரும்புகின்றார்கள். நாமும் விரும்புகின்றோம். ஆனால், அது எமது கைகளில் மாத்திரம் இல்லை. பல புற சக்திகள் அதற்குத் தடையாக இருக்கின்றன. அதை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.

எமது பிரதான நோக்கு, எமது மக்களின் விடிவுக்கு நிரந்தர தீர்வுகளான காணி உரிமையும், வீட்டு உரிமையும், கல்வி உரிமையும் உறுதிப்படுத்தப்படுவதாகும். கல்வி உரிமைக்கு இந்திய அரசு உதவும் என நான் நம்புகின்றேன். காணி உரிமையை, நாம் இலங்கையில் பெறுவோம். இவற்றை எப்படி பெறுவது என்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணிதீர்க்கதரிசனத்துடன் நடக்கின்றது.

நாம் நினைத்தால், உடன் அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறலாம். ஆனால்அதைவிட இதுவே எமது நிதானமான தீர்க்கதரிசன நோக்கு என்பதை நான் பொறுப்புடன் கட்சித் தலைவராக கூறி வைக்க விரும்புகின்றேன்.' - என்றார். (02)

## பிரதிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாட்டை மேற்கொள்ள முயன்றபோது கிளிநொச்சிமற்றும்முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள், முல்லைத்தீவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிஆகியோரின தலைமையில் பௌத்த பிக்குகள், சிங்கள இளைஞர்கள் தமிழர்களின் வழிபாட்டு உரிமையை தடுத்து நிறுத்தி வன்முறையைத் தூண்டினர்எனவும்இதனால் குறித்த பொலிஸ் அதிகாரிகளுபக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு மனிதவுரிமையை நசிலை நிறுத்துமாறும் தெரிவித்து இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (100)

## வேற்றுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகள் இனிமேல், எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேற்றுக் கிரக வாசிகள் தலையிட வேண்டும் எனக் கோரினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும்' என்பது போல், எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையே நான் காலகாலமாக வலியுறுத்தி வருபவன்.

அன்று நான் எதைச் சொன்னேனோ அதுவே இப்போது நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

அன்று அதனை எதிர்த்த ஏனைய தமிழ் அரசியல்வாதிகள், இன்று அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையை காலம் அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆனால்,அன்றுஅவர்கள் எதிர்த்தமைக்கும், இன்று அவர்கள் ஆதரிப்பதற்கும் சுயலாப உள் நோக்கம் காரணமாக இருக்கின்றதே அன்றி, அதில் உண்மைத் தன்மை - நேர்மை எதுவும் இல்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள் நல்லிணக்கம் என்பதை வெறும் வார்த்தையில் மாத்திரம் வரையறுத்துக் கொள்ளாமல், அதனை செயலில் காட்டுவதற்கு எப்போதுமே தயாராக உள்ளவர்.

அந்த வகையில், அவர் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றஇக்காலகட்டம்ஒரு அரிய வாய்ப்பாகும். இந்தச் சநதர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் இத்தகையதொரு சந்தர்ப்பம் இனி வாய்க்கும் என்பதை உறுதியாகக் கூற இயலாது.

எமது மக்களின் பிரச்சினைகளை, எமது பகுதிகளின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்கின்ற உண்மையான அக்கறை காரணமாகவே அவர் அனைத்து தமிழ்க் கட்சிகளினதும் பிரதிநிதிகளை அடிக்கடி அழைத்து கலந்துரையாடி வருகின்றார்.

கௌரவ ஜனாதிபதி அவர்களின் அழைப்பினை ஏற்று, அவருடன் கலந்துரையாடிவிட்டு, வெளியில் வந்ததும் ஊடகங்களுக்காக'இதுசாத்தியப்படாது. அது சாத்தியப்படாது' என அபசகுனமாகக்கூறிக்கொண்டிராமல், நாங்கள் முன்வைக்கின்ற விடயங்களை செயல்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளையும் நாம் கையாள வேண்டும். அதுதான் உண்மையான மக்கள் பிரதிநிதி ஆற்ற வேண்டியபொறுப்பாகின்றது - என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தொழிலாளர் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன், உலகத் தொழிலாளர் அமைப்பு ஆய்வு நடத்தி அதன் இறுதி அறிக்கையை அமைச்சிடம் ஒப்படைத்திருந்தது.

பின்னர், முத்தரப்புக்குழு பல சுற்றுக் கலந்துரையாடல்களின் மூலம் நீண்டகால, மத்திய மற்றும் குறுகிய கால அடிப்படையில் கண்டறியப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்புகள் உருவாகும் வாய்ப்புகளைக் கண்டறிந்து, அந்த வேலை வாய்ப்புகளுக்கு மக்களை வழிநடத்துவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்யும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

## காலியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைசெய்யப்பட்டுள்ளார்.

ஒட்டோவில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் அவர் மீது சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த இளைஞரின் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த குறித்த நபர், பாதாளக் குழுக்களுடன் தொடர்பில் இருந்தவர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (02)

## கடலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டைதொடக்கம் பொத்துவில் வரையான கடற்பரப்புக்களிலும், புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலைவரையான கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயற்கை அபாய எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் 2.5 மீற்றர் உயரத்துக்குக்கடல்அலைகள் அதிகரிக்கக் கூடும் என்றும் அந்தப்பிரிவுமேலும்தெரிவித்துள்ளது. (02)

## ஊழல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலம் அனைத்து வகையான ஊழலுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (02)

## ரூ.11மில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிடப்பட்ட 18 பொதிகளில் இருந்து 35 கிலோ 900 கிராம் கேரளா கஞ்சாவை மீட்டனர்.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மீட்கப்பட்ட கஞ்சாவைக் கடற்படை முகாமில் வைத்துள்ள கடற்படையினர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# சுற்றுலாத்துறை ஒன்றியப் பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநரை சந்தித்து பேச்சு



வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று வடக்கு மாகாண ஆளுநரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

வடமாகாணத்தில்உள்ளசுற்றுலாவிடுதிகள் விருந்தகங்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்து வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றயம் எனும் பெயரில் நீண்டகாலமாக இயங்கி வருகின்றது. அண்மையில் இதற்குரிய புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரச உயர் மட்டங்களுடனான உத்தியோகபூர்வ சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. அவற்றில் நேற்று மேற்குறிப்பிட்ட ஒன்றிய பிரதிநிகளுக்கும் ஆளுநருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் தலைவர் சு.சுதர்சன் தலைமையிலான ஒன்றிய அணியில் கிளிநொச்சிமுல்லைத்தீவுமாவட்டங்களைச்சேர்ந்த பிரதிநிதிகளும் இடம்பெற்றிருந்தனர. குறித்த சந்திப்பில் கலந்து கொண் டனர். வடமாகாண சுற்றுலாத்துறையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பா கவும் சுற்றுலாத்துறையினர் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் தொடர்பாகவும்O இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. வருங்காலத்தில் சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் கூட்டு முயற்சி மூலமாக பல செயற்றிட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் வடமாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் தலைவர் பத்திநாதனும்கலந்துகொண்டார். வடமாகாண சுற்றுலாத்துறைபணியகம்குறித்தசந்திப்பினை ஏற்பாடுசெய்திருந்தது. அளுநருடனானசந்திப்பு புதியநம்பிக்கையினை ஏற்படுத்தியிருப்பதாக ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# 60இற்கும் மேற்பட்டவர்களுக்கு யாழ். பொலிஸார் வலைவீச்சு

## போலி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய குற்றச்சாட்டில்

யாழில்சுமார்60இற்கும் மேற்பட்டவர்களுக்கு போலி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களையும்அவர்களுக்கு போலி சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கிய வலையமைப்பை சேர்ந்த வர்களையும் கைது செய்வதற்கு நீதிமன்ற அனுமதியை கோரவுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்போலி சாரதி அனுமதி பத்திரத்துடன் கடந்த 08 ஆம் திகதி இருவர் கைது செய்யப்பட்டனர். அதனை அடுத்து யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினருக்கு பொலிஸார் அறிவித்து இருந்தனர்.

அந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை போலி சாரதி அனுமதி பத்திரத்தை புதுப்பிக்க வந்த தெல்லிப்பழை பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் தொடர்பில் போக்கு-வரத்து திணைக்களத்தினர் பொலிஸாருக்குஅறிவித்ததை அடுத்து,பொலிஸார்அவரைக் கைது செய்திருந்தனர்.

அதேவேளை கடந்த திங்கட்கிழமையாழ்.போதனா வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவரும் , இன்னுமொருவரும், போலி சாரதி அனுமதி பத்திரத்துடன், கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் , யாழ்ப்பாணத்தில் சுமார் 60 இற்கும் அதிகமானோருக்கு போலி சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சாரதி அனுமதி பத்திரத்திற்கான எழுத்து பரீட்சையில் இரண்டு தரம் தோற்றியும் சித்தியடையத் தவறிய-வர்களை இலக்கு வைத்து கும்பல் ஒன்று, செயற்பட்டு , அவர்களிடம்அதிகபணத்தைப் பெற்று , போலிசாரதிஅனுமதி பத்திரங்களைவழங்கியுள்ளது.

குறித்த கும்பலுக்கும் மாவட்ட போக்குவரத்து திணைக்களஅதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கும் என தாம் சந்தேகிப்பதால் , நீதிமன்ற அனுமதியைப்பெற்று, மாவட்ட மோட்டார் போக்கு-வரத்து திணைக்களத்தின் ஒத்துழைப்புடன், முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து போலி சாரதி அனுமதிபத்திரத்தை வழங்கி வரும் கும்பலை கைது செய்யவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)



# இலவச சுகாதாரத் துறைக்கு மீதான சதியே குற்றச்சாட்டு

## அமைச்சர் கெஹலிய கூறுகின்றார்

இலவச சுகாதாரத் துறைக்குஎதிரானசதித்திட்டமாகவே குற்றச்சாட்டுக்களை பார்ப்பதாக சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்தவிடயம்தொடர்பாகஅவர் மேலும் தெரிவிக்கையில் -

'பேராதனை யுவதி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பொய்யான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

குறித்த யுவதிக்கு அந்த மருந்து செலுத்தப்பட்ட அதேநேரம், அதே அறையில் இருந்த 12 பேருக்கும் அந்த மருந்துசெலுத்தப்பட்டுள்ளது.

தற்போது மேலும் 4 பேருக்கு அந்த மருந்து உட்செலுத்தப்பட்டுள்ளது. எனவே, எதன் அடிப்படையில் இது தரமற்ற மருந்து என இவர்கள் கூறுகிறார்கள்?

2003 ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதியன்று, நாட்டின் பிரபலமான நிறுவனமான பவர் நிறுவனம் தான் இந்த மருந்தை முதன் முதலில் கொண்டுவந்தது.

இந்த மருந்து 20 வருடங்களாக நாட்டில் பாவனையில் இருக்கும் ஒன்றாகும்.

இவ்வாறான நிலையில், இது இலவச சுகாதாரத் துறைக்கு எதிரான சதித்திட்டமாகவே இந்த குற்றச்சாட்டுக்களை நாம் பார்க்கிறோம்.

இது திட்டமிடப்பட்ட செயலாகும். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும்போது எரிவாயு சிலிண்டர்கள் தொடர்ச்சியாக நாட்டில் வெடித்தன.

ஆனால், அவர் இராஜினாமா செய்து சென்ற பின்னர், அவ்வாறு ஒரு சம்பவம் கூடப் பதிவாக வில்லை.

அதேபோன்றுதான் இந்த செயற்பாடும் கருதப்படுகிறது. இதுமிகவும்மோசமானதொரு செயற்பாடாகும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)



# சாணக்கியன் எம்.பி. விவகாரம் 3 பேர் கைது

மட்டக்களப்பில்நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எம்.பியை தாக்க முற்பட்ட இருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் 3பேரைசெவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 10 இற்கும் மேற்பட்டவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்கள் தலை மறைவாகியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளர்.

மட்டு தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் திங்கட்கிழமை அனுமதி பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் போக்குவரத்து பஸ்களைத் தடுக்குமாறு தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர்கள், நடத்துநர்கள் மற்றும் சாரதிகள் நடத்திய ஆர்ப்பாட்டதில் இரா. சாணக்கியன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது அங்கு உரையாற்றிய சாணக்கியன் -

இந்த போக்குவரத்து அனுமதியில் ஊழல் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் பின்னணியில்அரசியல்கட்சி ஒன்று இருப்பதாகவும் தெரிவித்திருந்த நிலையில் அங்கு உள்நுழைந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை தாக்குவதற்கு முற்பட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுது இது குறித்து இருவரையும் ஆர்ப்பாட்டகாரர்கள் அங்கிருந்துவெளியேற்றியதுடைன் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் தாக்குதலுக்கு உள்ளான இருவரும் செய்த முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# இந்தியா அழுத்தம் கொடுத்தால் பதில் ராஜதந்திரமாக இருக்கும்

## அமைச்சர் பந்துல விளக்கம்

தமிழ்க் கட்சிகளின் கடிதம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்திய ஆளும் தரப்பு அழுத்தம் விடுத்தால், அதற்கு இராஜதந்திர ரீதியான பதிலை ஜனாதிபதி வழங்கு-வார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, அரசதகவல்திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர், கத்மண்டு விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவை விமானங்களுக்கான எரி பொருள் விநியோக ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே நடைமு-றையில் இருக்கும் ஒப்பந்தம் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள நிலையில், விமானங்களுக்கான புதிய எரிபொருள் விநியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச பெறுகை முறையின் கீழ் போட்டி விலைமுறி கோரப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.



இதற்கு ஒரேயொரு போட்டிவிலைமுறிமாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளதை அடுத்து, குறித்த ஒப்பந்தத்தின் விவரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களைக் கொண்ட குறித்தவிலைமனுதாரருக்கு, 2 ஆண்டுகளுக்கு இதனை வழங்க துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (05)



## கிளிநொச்சி வைத்தியசாலையில்

# பிரசவ அறை குளிரூட்டி பழுது கர்ப்பிணிகள் பெரும் சிரமம்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரசவ அறைக்கான குளிரூட்டிபழுதடைந்துள்ளதால் வைத்தியசாலைக்கு பிரசவத்துக்காகச் செல்லும் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வைத்திய சாலையின் பிரசவ அறைக்கான குளிரூட்டிகடந்த ஒரு வாரத்துக்கு மேலாகப்பழுதடைந்தநிலையில் காணப்படுகின்றது. இதனால்மகப்பேற்றுக்காகச் சென்று பிரசவத்துக்காக தங்கியிருங்கும் தாய்மார் பெரும் கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர். முல்லைத்தீவு, மல்லாவி, மாங்குளம், நட்டாங்கண்டல் ஆகிய வைத்தியசாலைகளிலிருந்தும் விசுவமடு, உடையார்கட்டு ,தருமபுரம் ஆகிய பகுதிகளிலும் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் பிரசவத்துக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கே வருகின்றனர். அதேவேளை கடந்த ஜனவரி மாதம் முதல் அதிகளவான பிறப்பு வீதத்தை கொண்ட வைத்தியசாலைகளில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையும் ஒன்றாகக் காணப்படுகிறது.

இந்நிலையில் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று அறையின் குளிரூட்டி வசதி முற்றாக செயலிழந்துள்ளது.

வைத்தியசாலையில் அடிக்கடி குளிரூட்டி வசதிகள் பழுதடைந்து வருகின்ற நிலையிலும், அதனை சீர் செய்கின்ற போதும் மீளவும் அவை பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில் இது தொடர்பில் மருத்துவத் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# பாகிஸ்தானுக்கான தூதுவராக அட்மிரல் ரவீந்திர நியமிப்பு!

பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கடற்படைத்தளபதியாகவும் பாதுகாப்பு படைகளின் பிரதானியாகவும் இவர் செயற்பட்டுள்ளார்.

குறித்த பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர், அவர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின்முகாமைத்துவ பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# நீர் மற்றும் கழிவுநீர் கட்டணத்தை திருத்த அமைச்சரவை ஒப்புதல்

நீர் மற்றும் கழிவுநீர்க் கட்டணத்தை திருத்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் பிரகாரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது

பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்துக்கான அணுகலைவிரிவுபடுத்துதல், சேவையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான நீர் விநியோகங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையின்நிதிநம்பகத்தன்மை மற்றும் நிலைத்தன்மையை சரிபார்க்கும் நோக்கத்துடன் தொடர்புடைய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறைந்த வருமானம்பெறும்பிரிவினர் மற்றும் கல்வி, மதம் மற்றும் பொது நீர் விநியோகம் தொடர்பாக வழங்கப்படும் சமூகப் பாதுகாப்புத் தளங்களில் குறைந்த தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கட்டணத்திருத்தம்அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (05)



# மலசலகூட குழிக்குள் விழுந்த காட்டு யானை உயிரிழந்தது

*அநுராதபுரம் - புலங்குளம் பகுதியில் மலசலகூட குழிக்குள் விழுந்துகாட்டுயானை உயிரிழந்துள்ளது.*

*சுமார் 20 வயது மதிக்கத்தக்க இந்த காட்டு யானை மலசலகூட குழிக்குள் விழுந்து மூச்சு விடுவதில் சிரமம் காரணமாகஉயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அநுராதபுரம் கலயாய வனவிலங்கு அலுவலகத்தின் வனவிலங்கு அதிகாரிகள் யானையின் சடலத்தை கனரக வாகனத்தின் உதவியுடன் மீட்டுள்ளனர். (05)*

### காலாவதியான சொக்லட்டுகள் சிக்கின

கண்டியில் உள்ள முன்னணி வர்த்தக ஸ்தாபனமொன்றில் மாநகர சுகாதார திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது காலாவதியான டொபிகள் மற்றும் சொக்லேட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பக்கெட்டுகளில் காலாவதி திகதியை மாற்றி இந்த இனிப்புகளை வணிக நிறுவன நிர்வாகம் விற்பனைசெய்துவருவதாகவும், தயாரிக்கப்பட்ட திகதி அல்லது உற்பத்தி நாடு பக்கெட்டுகளில் குறிப்பிடப்படவில்லை என்றும் தலைமை மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பசன் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அந்த வணிக நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# தேங்காய் விலை எகிறலுக்கு இடைத்தரகர்களே காரணம்

தேங்காய்களின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளமைக்கு இடைத்தரகர்கள் அதிக இலாபத்தை வைத்து நுகர்வோருக்கு தேங்காய்களை விற்பனை செய்வதே பிரதான காரணம் என தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தென்னை அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், விவசாயிகள் வழங்கும் தேங்காய்களின் விலைக்கும் சந்தையில் தேங்காய்களின் விலைக்கும் அதிக வித்தியாசம் காணப்படுவதாகவும், தற்போது இடைத்தரகர்கள் கட்டுப்பாடின்றி தேங்காய் விலையை கையாள்வதாகவும் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார் .

தென்னைச் செய்கையாளர்களிடமிருந்து 50 - 55 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் பெறப்படும் ஒரு தேங்காய் கொழும்பு போன்ற நகரப் பகுதிகளில் 100 - 120 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னை அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் தேங்காய் ஏலத்தில் தேங்காய் ஒன்று 57 - 60 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும், அதிகபட்ச விலை சுமார் 63 ரூபாவாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



தேங்காயின் விலையை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, தென்னை விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையில் முறையான தொடர்பை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர் அரசியல் போக்கின் பரிதாபத்துக்குரிய நிலை

போருக்குப் பின்னரான ஈழத் தமிழ் உலகு இழந்து வரும் ஒரு முக்கிய விடயத்தை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரான பொ.ஐங்கரநேசன் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

"இங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே தமிழ் இனத்தின் பண்பாடு குறித்தும் கலை, இலக்கியங்கள் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்கெனக் கலை பண்பாட்டுக் கழகம் என்று தனியான ஓர் அலகே உருவாக்கப்பட்டது. போராளிகளிடம் மாத்திரமல்லாமல் தமிழ்ப் பண்பாடு குறித்த உணர்வுபூர்வமான பிரக்ஞை மக்களிடமும் ஏற்படுத்தப்பட்டது. தென்னிலங்கையிலும் தமிழ்–சிங்கள கலைக்கூடல் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், முள்ளிவாய்க்கால் போருக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் கலை, இலக்கியம், பண்பாடு பற்றிய சிந்தனை இல்லாமல் போய்விட்டது" என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்ப்பண்பாட்டுவிழாக்களில்ஒன்றானஆடிப்பிறப்புக் கொண்டாடத்தையொட்டியே அவரது இந்த ஆதங்கம் வெளிப்பட்டுள்ளது.

சிங்கள – பௌத்த மேலாதிக்கத்தினாலும் உலக மயமாக்கலினாலும் ஒருபுறம் தமிழ்ப் பண்பாடு சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் தமிழ் மக்களினது உதாசீனத்தாலும் தமிழ்ப் பண்பாடு அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். எல்லாவற்றையும்விட முக்கியமாக, மேடைகளில் தமிழ்த் தேசியம் குறித்து முழங்கும் எங்களது அரசியல் கட்சிகள் எதுவும் தேசியத்தில் பண்பாட்டின் வகிபாகம் குறித்துக் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை என்கிற குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ளார்.

"பண்பாட்டைஉள்வாங்காததேசியம்ஒருபோதும்முழுமை பெறாது. அது உள்ளீடற்ற கொழுக்கட்டை போன்றதே என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

தேசியம் பற்றி அரசியல்வாதிகள் அதிகம் பேசினாலும் அது மக்களிடம்தான் உள்ளது. மக்களே அதனை அடைகாக்கிறார்கள். ஓர் இனத்தை மற்றைய இனங்களிடமிருந்து வேறுபிரித்துக்காட்டும் தனித்துவமான வாழ்வியல் முறைமையே தேசியமாகும். இதில் முள்ளெலும்பு போன்று பண்பாடு வகிக்கும் பாத்திரம் பிரதானமானது. இதனாலேயே ஓர் இனத்தை அழிக்க நினைப்பவர்கள் முதலில் பண்பாட்டைச் சிதைப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

இதனை எதிர்கொள்வதற்கு நாம் கலை, இலக்கிய, பண்பாட்டுச் செயற்பாடுகளை அரசியலுடன் சேர்த்து ஓர் பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டும்" என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசியத்தை வாக்கு வேட்டைக்கான கருவியாக மட்டுமே பார்க்கும் இன்றைய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு விடயங்களில் அக்கறைகொள்வதில்லைஎன்பதுஎன்னவோமுற்றிலும் உண்மைதான். இன்னும் ஒருபடி மேலே சென்று மொழி அரசியல் பேசும் இந்தக் கட்சிகள் தமிழ் மொழியின் பயன்பாட்டு நிலை குறித்த எந்த அக்கறையையும் கொண்டிருப்பதில்லை என்பதும் அதைவிடக் கவலை தரும் விடயம். ஒரு காலத்தில் தமிழர்களின் கலாசாரத் தலைநகரம் என்று வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாணம், இன்று அந்த நிலையை இழந்துவருவது குறித்தும் இந்த அரசியல்வாதிகள் கவலை கொண்டதில்லை.

அண்மைக் காலமாக மதத்தின் மீது காட்டப்படும் அக்கறைகூட தமிழ் மக்களின் கலை, இலக்கிய, பண்பாடு, மொழி மீது காட்டப்படவில்லை என்பது மிக மோசமானதொரு நிலை. இந்திலிருந்து மீள்வதற்கான அவசரமான திட்டங்களும், செயற்பாடுகளுமே உடனடியத் தேவை.



## சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவை கொண்டாடும் கரவெட்டி மக்கள்

இளையதம்பி இராகவன்



தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் நாடாளு மன்ற உறுப்பினருமான முருகேசு சிவசிதம்பரத்தின் பிறந்த நூற்றாண்டு நினைவை முன்னிட்டு அவரின் சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியின் மக்களின் சார்பில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் இன்று வியாழக்கிழமை மாலை அங்குள்ள மகேசன் விளையாட்டரங்கில் விழாவொன்றை ஏற்பாடு செய்திருக்கிறது.

அவரின் அரசியல் வாழ்வை விவரிக்கும் தலைவர் சிவா 100 'என்ற ஆவணநூலும் வெளியிட்டு வைக்கப்படுகிறது.

சிவசிதம்பரத்தை 'சிவா ' என்றே எல்லோரும் அன்புடன் அழைப்பர். அவர் கரவெட்டியின் அடையாளங்களாக விளங்கிய மகத்தான ஆளுமைகளில் ஒருவர். சிவாவைநினைவுகூருவதுஎன்பது சுமார் அரை நூற்றாண்டு காலமாகதமிழர் அரசியலைஆகர்சித்திருந்த பெருந்தலைவர்களில் ஒருவரின் நினைவை மீட்டுவதற்கு ஒப்பானது. அதற்கும் அப்பால் கரவெட்டி மக்களைப் பொறுத்தவரை தங்கள் மத்தியில் வாழ்ந்த ஆளுமையின் நினைவைகொண்டாடுவதாகவும் அமைகிறது.

இன்றைய பெரும்பாலான அரசில்வாதிகளுடன் ஒப்பிடும்போது சிவா போன்று அரசியல்வாழ்விலும்தனிப்பட்ட வாழ்விலும் நேர்மையும் கண்ணியமும் கொண்ட தலைவர்கள் எம்மத்தியில் இருந்தார்கள்என்பதைஇன்றைய இளம் சந்ததி நம்ப மறுக்கவும் கூடும்.

அரசியலில் கொள்கை வேறுபாடுகொண்டவர்கள்கூட சிவா மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள்.

தனது இளமைக் காலத்தில் கம்யூனிசக்கொள்கைகளினால் ஈர்க்கப்பட்ட சிவா தமிழ் மக்களுக்கு எதிரான இன ரீதியான பாகுபாடுகள் தீவிரமடையத்தொடங்கியதையடுத்து தமிழ்த் தேசியவாத கொள்கைகளை தவிர்க்கமுடியாமல் தழுவிக்கொண்டார்.

அதற்குப் பிறகு அவர் திரும்பிப்பார்க்கவே இல்லை. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானபோதிலும், சிவா தமிழர்களின் ஐக்கியம் என்று வரும்போது கட்சி அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. அதை 1961 இலங்கைத் தமிழரசு கட்சி முன்னெடுத்த சத்தியாக்கிரக போராட்டத்திலும் 1972 ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் உருவாக்கத்திலும் அவரின் முழுமையான பங்கேற்பு பறைசாற்றியது.

பதவிகளைப் பெறுவதில் சிவா ஒருபோதும் அக்கறை காட்டியதில்லை. அவர் வகித்த பதவிகள் எல்லாமே அவரை தேடிவந்தவை. மற்றவர்களுக்கு பதவிகளை விட்டுக்கொடுப்பது என்று வரும்போது அதைச் செய்வதில் முதல் ஆளாக சிவா விளங்கினார். தன்னை முன்னிலைப்படுத்தும் அரசியலையும் சிவா ஒருபோதும் செய்ததில்லை.

ஒரு கட்டத்தில் தமிழ் காங்கிரஸ் மீதான சிவாவின் கட்டுப்பாடு அவரின் கைகளை விட்டுச் செல்கின்ற நிலை ஏற்பட்டபோதுகூட அவர் கவலைப்படவில்லை. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஐக்கியப்பட்டுமுன்னெடுப்பதற்கு அப்பால் தனக்கு வேறு எந்த அரசியல் நலனும் கிடையாது என்பதே சிவாவின் உறுதியான நிலைப்பாடாக இருந்தது. தனது இறுதி மூச்சுவரை அவர் அந்த நிலைப்பாட்டைக் கைவிடவில்லை.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னர் தமிழர்கள் மத்தியில் ஐக்கியம் முன்னென்றும் இல்லாத அளவுக்கு அவசியப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் தமிழ் தேசியவாத அரசி யல் சக்திகள் பல்வேறு அணிகளாகச் சிதறுண்டு கிடக்கின்ற கவலைக்குரிய நிலையை பார்க்கின்றபோதுதான் சிவாவின் மேன்மை பிரகாசமாகத் தெரிகிறது.

**சிவசிதம்பரத்தை 'சிவா' என்றே எல்லோரும் அன்புடன் அழைப்பர். அவர் கரவெட்டியின் அடையாளங்களாக விளங்கிய மகத்தான ஆளுமைகளில் ஒருவர். சிவாவை நினைவு கூருவது என்பது சுமார் அரை நூற்றாண்டு காலமாக தமிழர் அரசியலை ஆகர்சித்திருந்த பெருந்தலைவர்களில் ஒருவரின் நினைவை மீட்டுவதற்கு ஒப்பானது. அதற்கும் அப்பால் கரவெட்டி மக்களைப் பொறுத்தவரை தங்கள் மத்தியில் வாழ்ந்த ஆளுமையின் நினைவை கொண்டாடுவதாகவும் அமைகிறது.**




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நரம்பியல்சார் நோய்கள் வடக்கில் திடீர் அதிகரிப்பு

## மது பாவனையே காரணமாம்

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் மது பாவனையின் காரணமாக, வடக்கில் நரம்பியல் சார் நோய்கள் அதிகரித்துள்ளன என நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகரித்த மது பாவனையின் காரணமாக வடக்கு மாகாணத்தில் நரம்பியல் சார்ந்த நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் இன்சுலின் உற்பத்திதடைப்படுகின்றது. மதுபாவனையை தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதேபோல போதைப் பொருள் பாவனையும் நரம்பியல் சார் நோய்களின் அதிகரிப்புக்கு ஒரு காரணமாக உள்ளது.

குறிப்பாக இளையவர்கள் நரம்பியல் நோய்கள் மற்றும் திடீர் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே, அதிகரித்துள்ள மதுபாவனை போதைபொருள் பாவனையால் அவர்கள் அறியாமலே அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த மதுபாவனையை கட்டுப்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அஜந்தா கேசவராஜா தெரிவித்தார். (05)

# களனி பாலத்தில் ஆணி திருட்டா? தயாசிறி கேள்வி

களனி பாலத்தில் 28 கோடி ரூபா பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டன எனக் கூறப்படும் விவகாரம் நாட்டில் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், இதுதொடர்பாகநாடாளுமன்ற உறுப்பினர்தயாசிறிஜயசேகர நாடாளுமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

இந்த விவகாரத்தின் உண்மைத் தன்மையை அமைச்சர் பந்துல குணவர்த்தன சபைக்கு அறிவிக்கவேண்டும்என்றும் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர், ' 2021, நவம்பர் 27 ஆம் திகதியன்று புதிய களனி பாலம் திறக்கப்பட்டது. இன்றுடன் இது திறக்கப்பட்டு 599 நாள்கள் ஆகின்றன.

ஆனால், இங்கிருந்து 28 கோடி ரூபா பெறுமதியான ஆணிகள் திருடப்பட்டுள்ளன என இம்மாதம் தகவல் ஒன்று வெளிவந்துள்ளது.

அதாவது, 8 லட்சத்து 75 ஆயிரத்து 866 டொலர் பெறுமதியான ஆணிகள்தான் இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

28 கோடி ரூபா பெறுமதியான ஆணிகள் என்றால், 77 லட்சத்து 92 ஆயிரத்து 402 கிலோ இருப்புகள் இங்குகளவாடப்பட்டுள்ளமை தெரியவருகிறது.

ஓர் ஆணியின் நிறை 5 கிலோ என எடுத்துக் கொண்டால், 15 லட்சத்து 58 ஆயிரத்து 480 ஆணிகள், 599 நாள்களில் இங்கிருந்து கழற்றப்பட்டுள்ளன.

ஒரு நாளைக்கு 100 ஆணிகள் வீதம் திருடப்பட்டிருந்தால், 21 வருடங்களேனும் தேவை இவ்வளவு ஆணைகளைக் கழற்றுவதற்கு.

ஆனால், 599 நாள்களில் இவ்வளவு ஆணிகள் கழற்றப்பட்டிருக்குமானால், ஒரு நாளைக்கு 1300 ஆணிகளைக்கழற்றியிருக்க வேண்டும்.

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை கழற்றினால் கூட, 10 ஆணிகளைத்தான் இங்கிருந்து கழற்ற முடியும்.

எனவே, இந்த விடயத்தின் உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும்.

உண்மையில் இங்கு ஆணிகள் கழற்றப்பட்டுள்ளனவா? அல்லது ஆணிகள் பொறுத்தப்படவில்லையா என்பதை அமைச்சர் சபைக்கு கூற வேண்டும். - என்றார். (05)

# இலங்கை பொருளாதார மீட்சியில் விரைவான முன்னேற்றம் கண்டது

## உலக வங்கி பெருமிதம்

இலங்கை பொருளாதார மீட்சியில் விரைவான முன்னேற்றம் கண்டுள்ளதுடன், சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது என உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் கடாட் சேவோர்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இலங்கை பத்திரிக்கை ஸ்தாபனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 12 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். மேலும், இலங்கையின் வட்டிவிகிதங்கள் மற்றும் எதிர்மறையான வளர்ச்சி வீதங்கள் குறைவடைந்துள்ள அதேவேளை, பல பொருளாதார அடிப்படைகளும் வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இலங்கையர் எதிர்கொண்ட பாரிய போராட்டங்களின் விளைவான பல சிரமங்களை தாம் தனிப்பட்ட முறையில் அனுபவித்ததாக உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார்.

அந்த இடத்தில் இருந்து இலங்கை வேகமாக மீண்டுள்ளதுடன், நிலைமை மேலும் முன்னேற்றமடைவதற்கான தெளிவானஅறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இலங்கை முழுமையாக மீளவில்லை எனவும், இந்த வரலாறு மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ஏழை மற்றும் நலிந்த மக்களை உயர்நிலைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (05)

# நிதி மோசடி வழக்கில் குற்றத்தை ஏற்ற தம்பதி

*நிதி நிறுவனமொன்றை நடத்தி 164,185,000 ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் சக்விதி ரணசிங்கவும் அவரது மனைவியும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் புதன்கிழமை குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.*

*சட்ட மா அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பெட்டபந்தி முன்னிலையில் வாசிக்கப்பட்டது.*

*இதன்படி, குறித்த குற்றச்சாட்டை ஒப்புக் கொள்வதாக பிரதிவாதிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.*

*அதன் பின்னர், பிரதிவாதிகள் தலா 50 லட்சம் ரூபா வீதம் மாதாந்த தவணைகளில் உரிய தொகையை செலுத்துவதற்கு நீதிமன்றில் ஒப்புக்கொண்டனர்.*

*இதன்படி, முதல் தொகை இன்று செலுத்தப்படும் என, பிரதிவாதிகள் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (05)*

# தமது கட்சியின் நிலைப்பாட்டை அமெரிக்காவும் ஏற்றுள்ளதாம்

## ஈ.பி.டி.பி. ரங்கன் கூறுகிறார்

எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகளைக் காணவேண்டும். எதற்கெடுத்தாலும் சர்வதேசத்தை நாடுவதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை என்ற கருத்தை அமெரிக்கத் தூதுவர் தமிழ் தரப்பினருக்கு எடுத்துக் கூறி அதை முன்னெடுத்துச் செல்லுமாறு வலியுறுத்தியிருப்பது, எமது கட்சியின் நிலைப்பாடுகளே சரியானது என்பதை மீண்டும் உறுதி செய்துள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா கடந்த 33 வருடங்களாக 13 ஆவது சீர் திருத்தத்தின் அவசியத்தை – குறிப்பாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்



எனக் கூறிவந்த நிலையில் தற்போது தமிழ் கட்சிகள் காலங்கடந்தாவது அதனை ஏற்று இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதியமை வரவேற்கத்தக்க விடயம்.

இதேநேரம், இந்த 13 ஆவது திருத்தம் உள்ளிட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான ஆரம்ப புள்ளி மட்டும் தான் என எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளார்.

ஆனால் அக்கால பகுதியில் சில தமிழ் அரசியல்தலைமைகள் 13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஆரம்ப புள்ளியாக ஏற்காவிட்டாலும் தற்போது அதன் தாற்பரியத்தை அவர்களுக்கு காலம் உணர்த்தியுள்ளது.

இதை இவர்கள் கடந்தகாலங்களில் கிடைத்தசந்தர்ப்பங்களின்போது ஏற்றிருந்தால் இன்று புலிகளின் தலைவர் பிரபாகரனும் உயிரோடு இருந்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் ஈடுபட்டிருப்பதற்கான சந்தர்ப்பமும் இருந்திருக்கும்.

இதேநேரம் இன்று 13 ஆவது திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாக கொண்டு தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரங்களை முன்னெடுப்பதற்கு தமிழ் கட்சிகள் இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள நிலையில் யாழ்.மாவட்ட சிவில் அமைப்பினரும் கடிதத்தை யாழ்.இந்தியத் துணை தூதரகத்தில் கையளித்துள்ளனர்.

ஆகவே, 13 தொடர்பில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் தீர்க்கதரிசனமான கருத்தை தமிழ் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் ஏற்றுக்கொண்டமை வரவேற்கத்தக்க விடயம் என மேலும் தெரிவித்தார். (05)

# சிறுமியுடன் திருமண உறவு 29 வயது இளைஞன் கைது

கட்டுகஸ்தோட்டையில் 14 வயதான சிறுமியை 29 வயது இளைஞன் காதலித்து திருமண உறவில் இருந்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகளால் 29 வயதான அந்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த திருமண வாழ்க்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் கீழ் சிறுமியின் தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் உள்ள கலவன் பாடசாலையில் 10 ஆம் வகுப்பில் பயிலும் அந்தச் சிறுமியுடன் மேற்படி இளைஞன் ஒருவருடமாக காதல் தொடர்பில் இருந்து வந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் அச்சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச்சென்ற இளைஞன் சிறுமியுடன் திருமண வாழ்க்கை நடத்தியுள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இளைஞனும் சிறுமியும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இளைஞனையும் தாயாரையும் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறுமியை தங்களுடைய பொறுப்பின் கீழ், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியக அதிகாரிகள் கொண்டுவந்துள்ளனர். (05)

# பகிடிவதை செய்த 7 மீனவர் கைது

*பேருவளைமீன்பிடி துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பலநாள் மீன்பிடி படகில், முதன் முறையாக மீன்பிடிக்கச் சென்ற இளைஞருக்கு பகிடிவதை புரிந்த குற்றச்சாட்டில் 7 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக குறித்த மீன்பிடி படகு சென்றிருந்தபோது, குறித்த இளைஞரை கடலில் தள்ளிவிட்டு, சக மீனவர்கள் அவரை துன்புறுத்தியமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்படி, பேருவளை - அம்பேபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த குறித்த 7 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார்; தெரிவித்தனர். (05)*

# மருத்துவ முகாம்

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியமடு மேற்கு, பெரியமடு கிழக்கு, காய நகர், ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் மருத்துவத் தேவைகளை நிறைவேற்ற முடியாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் நலன் கருதி விசேட மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் முதியவர்களுக்கான விசேட செயற்திட்டங்களை டெவ்லிங் நிறுவனம் நடத்தி வருகிறது. அந்த வகையில் குறித்த இலவச மருத்துவ முகாம் மன்னார் ஈச்சளவக்கை பாடசாலையில் இடம் பெற்றது.

குறித்த மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் அருட்தந்தையர்கள், டெவ்லிங் நிறுவன மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், வைத்தியர்கள், தாதியர்கள், இயன் மருத்துவர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர் உட்பட 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 180 மேற்பட்ட முதியவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முதியவர்களுக்கு மருத்துவ சிகிச்சை உட்பட சக்கர நாற்காலி, ஊன்றுகோல் வழங்கப்பட்டதுடன் கண்ணாடிகள், காதுகேட்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. மேலும் மருத்துவ ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளும் மருத்துவ முகாமுடன் இணைந்து இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# இரணைமடு குடிநீர் திட்டத்தை தொடர்தால் பிரச்சினை வரும்

## ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டு

இரணைமடு குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்குக் குடிநீர் கொண்டுசெல்வதற்கான திட்டத்தை தொடர்ந்தும் செயற்படுத்துவதில் பாரிய அரசியல் பிரச்சினை இருப்பதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இரணைமடு குளத்தைப் புனரமைத்து யாழ்ப்பாணம் உட்பட ஏனைய மாவட்டங்களுக்கு நீரை வழங்க நடவடிக்கை எடுத்தால் பல பிரச்சினைகள் வரும் என கூறி பலதரப்பினரும் அதற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)



# முதியவரின் முறைப்பாட்டினை ஏற்க மறுத்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

*மாவத்தகம பொலிஸ் நிலையத்தில் முதியவர் ஒருவரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டை பதிவு செய்ய மறுத்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார் என மாவத்தகம பொலிஸார் தெரிவித்தனர். கடந்த திங்கட்கிழமை முதியவர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குச்சென்று மருமகன் தனது மகளை தாக்குவதாக கூறியபோதும், இந்த முறைப்பாட்டை குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் பதிவு செய்ய மறுத்துள்ளார். இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மாவத்தகம உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டு குறித்த பொலிஸ்கான்ஸ்டபிளை பணி இடைநிறுத்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)*

# குழந்தையைப் பணயக் கைதியாக்கி பொலிஸாரைத் தாக்கிய நபர் கைது



மதுரங்குளியபிரதேசத்தில்தனது குழந்தையை கூரிய ஆயுதத்தால் தாக்கியதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தாக்கிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மதுரங்குளி, ஜின்னவத்தை பிரதேசத்தில் பொலிஸ் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு பெண் ஒருவர் தாக்கப்பட்டதாக வந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் சந்தேக நபரைக் கைது செய்ய பொலிஸார் தயாரான போது, சந்தேக நபர் குழந்தையை பணயக்கைதியாக பிடித்து கூரிய ஆயுதத்தால் குழந்தையின் முதுகில் வெட்டியுள்ளார். பாரிய முயற்சிகளின் பின் காப்பாற்றப்பட்ட குழந்தை புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன், தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மதுரங்குளிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# இரவில் அதிரடி காட்டும் மட்டக்களப்பு பொலிஸார்

மட்டக்களப்பு மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவினர், போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி இரவில் பயணிக்கும் பஸ்களைக் கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தவகையில் செவ்வாய்க்கிழமை இரவு மட்டக்களப்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் மற்றும் மாவட்டத்துக்குள் நுழையும் பஸ்களை நிறுத்தி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இரவு 8 மணிக்கு ஆரம்பித்த இந்த விசேட சோதனை நடவடிக்கை இரவு 11 மணி வரைமுன்னெடுத்தனர். இதன்போது போக்குவரத்து அனுமதி பத்திரம் சாரதி அனுமதி பத்திரம் உட்பட போக்குவரத்து சேவைக்கான அனைத்து அனுமதி பத்திரங்களையும் சோதனையிட்டு பதிவேட்டில் பதிந்ததுடன், வீதி போக்குவரத்தை மீறி பயணித்த பஸ்களை எச்சரித்து அனுப்பியதுடன் எந்தவிதமான ஆவணங்களும் இன்றி மோட்டார்சைக்கிளைச் செலுத்திய மோட்டர்சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை அம்பாறை அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, கல்முனை, நிந்தவூர், களுவாஞ்சிக்குடி, கத்தான்குடி உட்பட பல பிரதேசங்களில் இருந்து போக்குவரத்து அனுமதி பத்திரமின்றி கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களுக்கு இரவு வேளைகளில் போக்குவரத்து சேவையில் சுமார் 11 பஸ்கள் ஈடுபடுகின்றன எனத் தகவல்கள் கிடைத்துள்ளன எனவும், குறித்த பஸ்களைக் கண்டறிந்து அவைகளை கைப்பற்றி நீதிமன்றல் வழக்கு தொடர்வதற்காக இந்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நடவடிக்கை தொடர்ந்துஇரவுவேளைகளில் இடம்பெறும் எனவும் மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (05)

# நாட்டு சுகாதாரத்துறையில் தவறுகள் இடம்பெறுவது இது முதல் முறையல்ல

## இப்படிக் கூறுகிறார் நாமல்

சுகாதாரத்துறையில் தவறுகள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்துப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் வெளிவருவது இது முதல் முறையல்ல என்பதால் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சர்களை மாற்றுவதால் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)



# தாமரை பறிக்க சென்றவர் தவறி விழுந்து உயிரிழப்பு

முல்லைத்தீவு தாமரைக்குளம் ஏரியில் தாமரை பறிக்க படகில் பயணித்த இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் படகில் பயணித்த போது படகில் இருந்த ஓட்டையிலிருந்து நீர் கசிந்து படகு மூழ்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தெற்கு முல்லைத்தீவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஆவார்.

சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (05)




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2
3




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2023இல் வெளியிடப்பெற்றது.